**கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.**

**முன்னிலை : செல்வி. D. ஜெயபாரதி, L.L.M.,**
நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24–ஆம் நாள் வெள்ளிக் கிழமை

**C.C. No. 354/2018**

CNR No.TNTH02-003-324-2018

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆண்டு பட்டிகை வழக்கு எண் | : | 354/2018 |
| 2. | வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட எண் | : | TNTH02-003-324-2018 |
| 3. | குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>அல்லிநகரம் காவல்நிலையம்,<br>தேனி. |
| 4. | குற்ற எண் மற்றும் இதச பிரிவுகள் | : | Cr.No. 81/2017; U/s. 341, 294(b), 323, 324 & 506(2) of IPC. |
| 5. | குற்றம் சாட்டப்பட்டவர் பெயர், வயது, தந்தைப்பெயர் மற்றும் முகவரி | : | முரளிகண்ணன், த/பெ. பெருமாள் செட்டியார், திருப்பூர். |
| 6. | சம்பவ தேதி | : | 27.02.2017 |
| 7. | புகார் அளிக்கப்பட்ட தேதி | : | 27.02.2017 |
| 8. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | எதிரி முன் பிணை பெற்றுச் சென்றுள்ளார் |
| 9. | எதிரி பிணையில் சென்ற நாள் | : | 17.03.2017 |
| 10. | எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது U/s.341, 294(b), 323, 324 & 506(2) of IPC–ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது. |

JAYABHARATHI DURAI

Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.27 22:17:15 +0530

| | | | |
|---|---|---|---|
| 11. | எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது U/s.341, 294(b), 323, 324 & 506(2) of IPC–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| 12. | எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| 13. | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 14.11.2025 |
| 14. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 09.04.2026 |
| 15. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 24.04.2026 |
| 16. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | எதிரி மீது U/s.341, 294(b), 323, 324 & 506(2) of IPC–ன் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருகிறது. |
| 17. | தீர்ப்பும் தண்டனையும் | : | முடிவில், எதிரி மீதான U/s.341, 294(b), 323, 324 & 506(2) of IPC–ன் படியான குற்றச்சாட்டுகளைப் பொறுத்து எதிரி குற்றவாளி இல்லை எனத் தீர்மானித்து கு.வி.மு.ச. 248(1) பிரிவின் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது . |
| 18. | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்கப்பட்ட நாள் | : | இல்லை |
| 19. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை |

JAYABHARATHI DURAI

Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.27 22:17:21 +0530

இவ்வழக்கானது 12.12.2018–ம் தேதியன்று தேனி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன் பின்னர் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் 05.02.2026–ம் தேதிய உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு 13.03.2026–ம் தேதி மாற்றம் செய்யப்பட்டு, அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. K.M. முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இறுதியாக இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த, இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

## தீர்ப்புரை

### 1) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்

கடந்த 27.02.2017–ம் தேதி 18.00 மணிக்கு பொம்மையகவுண்டன்பட்டி அட்சயா ஹோட்டல் அருகே சாட்சி–1 செல்லபாண்டி என்பவர் தனது இரு சக்கர வாகனத்தில் சாட்சி–2–டன் வந்தபோது எதிரி 1, 2 சாட்சிகளை வழிமறித்து ஏண்டா தேவடியா மகனே நானே பெரிய ரவுடிடா எனக்கூறி வண்டியிலிருந்து இரும்புக் கம்பியை எடுத்து வந்து சாட்சி–1–ன் தலையில் அடித்து சிறு காயம் ஏற்படுத்தியும், சாட்சி–2–ஐ கையால் அடித்தும், பன்னருவாளால் வயிற்றில் இழுத்து சிறு காயம் ஏற்படுத்தியும் என்னோட பிரச்சனை செய்தால் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அதன் காரணமாக எதிரி மீது 341, 294(b), 323, 324 & 506(ii) இதச பிரிவுகளின் கீழ் அல்லிநகர காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

### 2) அழைப்பாணை சார்வு செய்தல், நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு பற்றி வினவுதல்:

குற்றமுறையீட்டாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட எதிரி மீதான இறுதி அறிக்கை நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொண்ட பின் நீதிமன்றத்தின் அழைப்பாணையின் பேரில், எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, வழக்கு

JAYABHARATHI DURAI

Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.27 22:17:28 +0530

ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு எதிரி குற்றம் புரிந்திருப்பதற்கான முகாந்திரம் இருப்பதாக தோன்றியதால் எதிரி மீது U/s. 341, 294(b), 323, 324, 506(ii) பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கி வினவிய போது எதிரி குற்றவாளி இல்லை என்றும், குற்றச்சாட்டை மறுத்து வழக்கு விசாரணை வேண்டினார்.

**3)** எதிரி குற்றத்தை மறுத்ததால் அரசுத் தரப்பில் சாட்சிகள் விசாரிக்க உத்தரவிடப்பட்டு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அரசு தரப்பில், அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையானவர்கள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4)** **அரசுத்தரப்பின் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் புலனாகும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் :–**

(4–1) அ.சா.1 சிவராஜ்குமார் தனது சாட்சியத்தில் எதிரியை தெரியும் என்றும், புகார்தாரர் செல்லபாண்டி தனது நண்பர் என்றும், இவ்வழக்கு நிலுவையில் இருந்தபோது புகார்தாரர் செல்லபாண்டி இறந்துவிட்டார் என்றும், 2017–ம் ஆண்டு எதிரிக்கும், புகார்தாரர் மற்றும் தனக்கும் இடையே சிறு தகராறு ஏற்பட்டது என்றும், தானும், புகார்தாரரும் சென்று விசாரிக்க சொன்னோம் என்றும், இறந்துபோன செல்லப்பாண்டி புகார் கொடுத்தார் என்றும், தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகி விட்டோம் என்றும் அந்த சமாதான மனு அ.சா.ஆ.1 என்றும் கூறி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

(4–2) அ.சா.2. பாரதி முருகன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் கடந்த 03.03.2017–ம் தேதி சார்பு ஆய்வாளர் திரு.அழகர்சாமி நிலைய பொறுப்பில் இருந்தபோது மனு ரசீது எண்.125/2017–ஐ பார்வையிட்டு அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.81/2017, u/s.341, 294(b), 323, 324, 506(i) IPC–ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், புகார் அ.சா.ஆ.1 என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், பின்னர் அன்றைய தினமே மதியம் 1.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அ.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 தயார் செய்ததாகவும், பின்னர் அனைத்து சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் காயம்பட்ட செல்லப்பாண்டி மற்றும் சிவராஜ்குமார் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.27 22:17:35 +0530

மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்றதாகவும், அவை முறையே அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 என்றும், பின்னர் வழக்கு விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**5)** இவ்வழக்கின் அ.சா.2–ன் சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை பிரிவு 313(1)(ஆ) CRPC–ன் கீழ் எதிரிகளிடம் எடுத்துரைத்து வினவியபோது, எதிரிகள் பொய் சாட்சியம் எனவும், தன் மீதான வழக்கு பொய் வழக்கு என்றும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறியதன் பேரில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6)** இரு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.

**7)** **<u>தீர்வு மற்றும் தீர்வுக்குரிய காரணங்கள்:</u>**

**இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.**

(7–1) இவ்வழக்கின் புகார்தாரரான செல்லப்பாண்டி தான் கொடுத்த புகார் மனுவில் கடந்த 27.02.2017–ம் தேதி 18.00 மணிக்கு பொம்மையகவுண்டன்பட்டி அட்சயா ஹோட்டல் அருகே புகார்தாரர் செல்லப்பாண்டி, அ.சா.1– சிவராஜ்குமாருடன் இருசக்கர வாகனத்தில் வந்தபோது எதிரி வழிமறித்து ஏண்டா தேவடியா மகனே நானே பெரிய ரவுடிடா எனக்கூறி வண்டியிலிருந்து இரும்புக் கம்பியை எடுத்து வந்து புகார்தாரர் செல்லப்பாண்டியின் தலையில் அடித்து சிறு காயம் ஏற்படுத்தியும், அ.சா.1–ஐ கையால் அடித்தும், பன்னருவாளால் வயிற்றில் இழுத்து சிறு காயம் ஏற்படுத்தியும் என்னோட பிரச்சனை செய்தால் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும் கூறி புகார் கொடுத்துள்ளார்,

(7–2) மேற்படி புகார்தாரர் இவ்வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்துவிட்டதன் காரணமாக சம்பவத்தன்று புகார்தாரருடன் இருசக்கர வாகனத்தில் சென்றவரும், காயம்பட்டவருமான சிவராஜ்குமார் அ.சா.1 ஆக விசாரணை

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.27 22:17:40 +0530

செய்யப்பட்டுள்ளார். அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் இவ்வழக்கு நிலுவையில் இருந்தபோது புகார்தாரர் செல்லபாண்டி இறந்துவிட்டார் என்றும், 2017–ம் ஆண்டு எதிரிக்கும், புகார்தாரரான செல்லப்பாண்டி மற்றும் தனக்கும் இடையே சிறு தகராறு ஏற்பட்டது என்றும், தானும், புகார்தாரரும் சென்று விசாரிக்க சொன்னோம் என்றும், இறந்துபோன செல்லப்பாண்டி புகார் கொடுத்தார் என்றும், தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகி விட்டோம் என்றும் அந்த சமாதான மனு அ.சா.ஆ.1 என்றும் கூறி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். பின்னர் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டதில் முரண்பாடு எதுவும் வெளிக்கொணரப்படாததால், மேற்படி சாட்சியம் நம்பத்தகுந்ததாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(7–3) அ.சா.2. பாரதி முருகன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் கடந்த 03.03.2017–ம் தேதி சார்பு ஆய்வாளர் திரு.அழகர்சாமி நிலைய பொறுப்பில் இருந்தபோது மனு ரசீது எண்.125/2017–ஐ பார்வையிட்டு அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.81/2017, u/s.341, 294(b), 323, 324, 506(i) IPC–ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், புகார் அ.சா.ஆ.1 என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், பின்னர் அன்றைய தினமே மதியம் 1.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அ.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 தயார் செய்ததாகவும், பின்னர் அனைத்து சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் காயம்பட்ட செல்லப்பாண்டி மற்றும் சிவராஜ்குமார் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்றதாகவும், அவை முறையே அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 என்றும், பின்னர் வழக்கு விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**8)** இங்கு அ.சா.1 அவரது நீதிமன்ற விசாரணையில்தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகி விட்டோம் என்றும், அந்த சமாதான மனு அ.சா.ஆ.1 என்றும் கூறி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ள நிலையில், அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்டதாக கூறும் முதல் தகவல் அறிக்கை பற்றியும், அதில் உள்ள சங்கதிகள் பற்றியும் சந்தேகம் எழுகிறது.

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.27 22:17:47 +0530

**9)** இவ்வழக்கில் அ.சா.1 அவரது நீதிமன்ற விசாரணையில், தற்போது தானும் எதிரியும் சமாதானமாகிவிட்டதாக கூறி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும் எந்தவொரு முரண்பாட்டினையும் கொண்டு வர இயலாத நிலையில் மேற்படி எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10)** மேற்கண்டவாறு அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட அ.சா.1–ம் எதிரியும் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக கூறி பிரிவு 359 BNSS ன் கீழ் மனுதாக்கல் செய்து அம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்டதில் இவ்வழக்கின் குற்றப்பிரிவுகள் சமரசம் செய்து கொள்ளமுடியாத குற்றங்கள் என்பதால் அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் முன்னிறுத்தப்பட்டுள்ள அ.சா.1 அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையில், இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2–ன் சாட்சியத்தை மட்டும் வைத்து அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை போதிய சாட்சிய சான்றாவணங்களுடன் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.1–க்கான விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆகவும், புகார்தாரர் செல்லப்பாண்டிக்கான விபத்து பதிவேடு அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்து பதிவேடுகள் வழங்கிய மருத்துவரை இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை. எனவே, மேற்படி விபத்து பதிவேடானது வழக்கு சம்பவத்தின்போது ஏற்பட்ட காயத்திற்கான விபத்து பதிவேடுதானா ? என்பதில் சந்தேகம் எழுகிறது.

**11)** இறுதியாக, எதிரி மீதான இதச 341, 294(b), 323, 324 & 506(2) பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளைப் பொறுத்து எதிரி குற்றவாளி இல்லை எனத் தீர்மானித்து கு.வி.மு.ச. 248(1) பிரிவின் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**12)** இந்த வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்துள்ளார். எனவே எதிரி மீதான பிணைமுறி பத்திரம் இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு

JAYABHARATHI DURAI

Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.27 22:17:54 +0530

பின்னர் அல்லது மேல்முறையீடு எதுவும் நிலுவையில் இருப்பின் அது முடிந்த பின்னர் ரத்து செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

**13)** இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வழக்கு சொத்து பற்றிய தனிப்பட்ட உத்தரவு எதுவும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.27 22:18:07 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
தேனி.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

1. அ.சா.1 – திரு. சிவராஜ்குமார்
2. அ.சா.2 – பாரதி முருகன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

1. அ.சா.ஆ.1 – 359 BNSS-ன் கீழான சமாதான மனு (Crl.MP.No.743/2026)
2. அ.சா.ஆ.2 – புகார் மனு
3. அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை
4. அ.சா.ஆ.4 – பார்வை மகஜர்
5. அ.சா.ஆ.5 – மாதிரி வரைபடம்
6. அ.சா.ஆ.6 – அ.சா.1-சிவராஜ்குமாருக்கான விபத்து பதிவேடு
7. அ.சா.ஆ.7 – புகார்தாரர் செல்லப்பாண்டிக்கான விபத்து பதிவேடு

**<u>அரசுத் தரப்பு சான்று பொருள்:</u>** **இல்லை**.

**எதிரி தரப்பு சாட்சி:** இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணம் மற்றும் சான்று பொருள்:** இல்லை.

JAYABHARATHI DURAI

Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.27 22:18:14 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
தேனி.

**குறிப்பு :**

வழக்கின் முடிவு காவல்துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.

எந்த சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையிலிருந்தார்.

இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.